78
2.400
2.409

உ
சிவமயம்



# கும்பாபிஷேக தத்துவங்கள்

பதிப்பாளர்
" கிரியா வித்தகர் குருமணி "
**சிவத்திரு க. சிவபாதசுந்தரக் குருக்கள்**

வெளியீடு
அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை
மயிலிட்டி, தெற்கு,
தெல்லிப்பழை

ஆ. ஜெயருத்திரன்
1984.07.12



# பதிப்புரை

அறிவிலே சிறந்த நமது முன்னோர்கள் ஆலயங்களை அமைத்து திருவுருவங்களைப் பிரதிட்டை செய்து வழிபட்டு வந்தார்கள். அந்த ஒழுங்கு முறையிலே நாங்களும் இறைவனுக்கு ஆலயங்களை அமைத்து வழிபட்டு வருகின்றோம். முன்னோர்களினால் அமைக்கப்பட்ட ஆலயங்கள் பழுதடைந்த போது திருப்பணி வேலைகளைச் செய்து கொள்ளுகிறோம். ஆலயங்களில் திருப்பணி வேலைகளைத் தொடங்கும் முன்பு பாலஸ்தாபனம் என்ற கிரியையைச் செய்தல் வேண்டும். பாலஸ்தாபனம் என்பது ஆலயத்திலுள்ள இறைவனை பாலாலயத்தில் எழுந்தருளச் செய்தலாகும். திருப்பணி வேலைகள் நிறைவு பெற்ற பின்னர் சுபமுகூர்த்த தினத்திலே ஆலயத்திலே திரும்பவும் திருவுருவங்களைப் பிரதிட்டை செய்து மகா கும்பாபிஷேகம் செய்து கொள்ளுகின்றோம். மகா கும்பாபிஷேகக் கிரியைகளை நடாத்துவிப்பதற்காக ஆசாரியார் அவர்களை நியமித்தல் தொடக்கம் மகா அபிஷேகம் நிறைவு பெற்று ஆசாரியார் அவர்களிடமிருந்து கும்பாபிஷேக பலத்தைப் பெற்றுக் கொள்ளும் வரையிலும் பல கிரியைகள் இடம் பெறுகின்றன. இக்கிரியைகளின் கருத்துக்களையும் தத்துவங்களையும் நாம் அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். சமயக் கிரியைகளை மக்கள் செய்விப்பதோடு நின்றுவிடாமல், அந்தக் கிரியைகள் செய்யப்படவேண்டிய

அவசியத்தையும் கருத்துக்களையும் அறிந்து பக்தி சிரத்தையோடு செய்வதனால் தான் பூரண பலத்தை அடையமுடியும்.

அழகாக ஆலயங்களை அமைத்தால் மட்டும் போதாது. ஆகம முறைப்படி மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஒரு மண்டலாபிஷேக ஆராதனைகளைச் செய்தல் வேண்டும் மண்டல பூர்த்தி விழாவாக நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் செய்தல் வேண்டும். இக்கிரியைகளை நாங்கள் பக்தி சிரத்தையோடு செய்விப்பதனாலே அந்த ஆலயத்திலே தெய்வ சாந்நித்தியம் உண்டாகின்றது. அதனால் மக்கள் எல்லோரும் துன்பம் துயரம் நீங்கி திருவருள் பொலிவோடு வாள்வார்கள். உதாரணமாக மின் விசிறி ஒன்று இருக்கின்றது. அது மின் தொடர்பினாலே சுற்றுகின்றது. அதனது காற்றின் சுகத்தை மக்கள் எல்லோரும் அனுபவித்து இன்புறுகின்றார்கள். இதே போல் மந்திர சக்தியின் தொடர்பினாலே திருவுருவத்திலிருந்து தெய்வீக அலைகள் புறப்படுகின்றன. அந்த தெய்வீக அலைகளில் படிந்து மக்கள் சுகம் பெறுகின்றார்கள். ஆதலினாலே திருவுருவத்திலிருந்து தெய்வீக சக்தி குறைவில்லாமல் வருவதற்கு ஆலயங்களிலே நித்திய நைமித்திய வழிபாடுகள் செய்து வருதல் வேண்டும். காலத்திற்குக் காலம் மகாகும்பாபிஷேகங்கள் நடத்தி வருதல் வேண்டும்.

இக் கும்பாபிஷேகம் குறைந்தது பதினைந்து வருடங்களுக்கு ஒரு முறையாவது செய்து வருதல்

வேண்டுமென்று கூறப்படுகிறது. இந்தக்கும்பாபி ஷேக கிரியைகளிலே வேத பாராயணங்களோடு சேர்ந்து திருமுறைப் பாராயணமும் இடம்பெற வேண்டும்.

எமது முன்னோர்கள் எமக்காகத் தேடிவைத்த செல்வம் அது. தமிழ் வேதமாகிய திருமுறைகளைப் பத்தி சிரத்தையோடு பொருள் அறிந்து ஓதுதல் வேண்டும். 'காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி' ஓது தல்வேண்டும். கும்பாபிஷேக காலங்களிலே நாம் திருமுறைகளுக்கு முக்கிய இடம் கொடுத்தல் வேண்டும். அதுவுமல்லாமல் கும்பாபிஷேகம் திருக்கதவம் திருக்காப்பிட்டு மூன்று நாழிகைகள் கழித்து மீண்டும் திருக்கதவம் திறக்கப்படுகின்றது. இந்தக் காலங்களில் ஓதுதற்கான திருப்பதிகங்களை யும் அடியேன் இதில் சேர்துள்ளேன்.

ஒருதரம் திருஞானசம்பந்த சுவாமிகளும், திருநாவுக்கரசுசுவாமிகளும் திருமறைக்காட்டுறை மணாளனை வணங்குவதற்காகத் திருமறைக் காட்டுத் திருத்தலத்துக்குச் சென்றார்கள் அங்குவேதங்களால் அடைக்கப் பட்டிருந்த திருக்கதவினைத் திருநாவுக்கரசு சுவாமிகள் "பண்ணினேர் மொழியாள்" என்னும் பதிகம் பாடித் திறக்கச் செய்தார்கள் பின்பு இருவரும் உள்ளே சென்று சுவாமிதரிசனம் செய்து விட்டு வந்தார்கள் பின்பு திருஞானசம்பந்தசுவாமிகள் "சதுரம் மறைதான் என்னும் திருப்பதிகம் பாடி மூடச் செய்தார்கள். அதன் பின்பு அந்தக் திருக்கதவம் சாத்தித் திறக்கத்தக்கதாக இருந்தது. ஆகவே இந்த அற்புதத் திருப்பதிகங்களை மகாகும்பாபிஷேக காலங்களிலே ஓதிப் பயனடைவோமாக. சுபம்

இங்ஙனம்
ஆசிரியர்

## சிவானந்த குருகுல பரிபாலன சபைப் பொதுச் செயலாளரின்

# ஆசிச் செய்தி

சைவ உலகின் மறுமலர்ச்சிக் காலம் என்று இன்றைய கால கட்டத்தைக் கூறலாம். ஒவ்வொரு கிராமத்திலும் ஆலயங்கள் யாவும் சைவ ஆகம முறைப்படி புதுபிக்கப்பட்டுக் கும்பாபிஷேக விழாக்கள் சிறப்புற நடைபெற்று நித்திய நைமித் தியங்கள் நடைபெறுகின்றன.

கும்பாபிஷேக விழா ஆலயங்களில் நடை பெறும் முக்கிய தெய்வீக நிகழ்ச்சியாகும். இவ் விழாவின் போது நடைபெறும் கிரியைகளின் தத்து வத்தைச் சைவப் பெருமக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து அறிந்து செய்ய வேண்டும். செய்விக்க வேண்டும். வணங்க வேண்டும். அப்பொழுது தான் அதன் பலன் எமக்குப் பரிபூரணமாகக் கிடைக்கின் றது. இவ்வுண்மையை உணர்ந்து இக் காலத்திற்கு வேண்டியதை "கிரியா வித்தகர்" குருமணி சிவத் திரு. க. சிவபாதசுந்தரக் குருக்கள் அவர்கள் "கும்பாபிஷேக தத்துவம்" என்னும் இச் சிறந்த நூலைத் தொகுத்து எழுதியுள்ளார்கள்.

இந் நூலில் கும்பாபிஷேகத்தில் நிறைவு செய் யப்படும் மிக முக்கிய கிரியைகளின் விளக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவை பொதுவாகக் குருமார்

களுக்கும், தர்மகர்த்தாக்களுக்கும், சைவ அடியார் களுக்கும் பெரிதும் பயன் படும். பெரிய தத்துவங் களை எல்லாம் குருக்கள் அவர்கள் பாமர மக்களுக் கும் பயன் படக் கூடிய முறையில் சுருக்கமாக நல்ல தமிழில் நூல் வடிவில் தந்துள்ளார். அத்துடன் திருக்கோயில் திறக்கவும் சாத்தவும் திருமறைக் காட்டில் பாடிய திருமுறைகள் சேர்க்கப்பட்டுள் ளமை மிகச் சிறந்த அம்சமாகும்.

சிவத்திரு. க. சிவபாதசுந்தரக் குருக்கள் அவர் களின் இவ்வாறான இறைபணி மேலும் வளர்வுற இறைவன் அருள்புரிய வேண்டும் எனப் பிரார்த் தித்து, சிவானந்த குருகுல சார்பில் ஆசிகளை வழங்குகிறேன்.

இங்ஙனம்

கு. ஜெதீஸ்வரக் குருக்கள்

# கும்பாபிஷேகம்

கும்பாபிஷேகம் என்பது கும்பத்தை முறைப்படி பூரித்து அதில் மந்திரங்களைப் பதித்து வழிபாடுகள் செய்து பின் அந்தக் கும்பத்தை பிரதட்சணமாகக் கொண்டு சென்று பெருமாளின் திருமுடியிலே அபிஷேகம் செய்வது. கும்பம் என்ற சொல்லைத் காதால் கேட்டவுடனே இறைவனின் அருளுருவத் திருமேனி எமது கண் முன்னே நிற்கிறது.

கும்பத்தின் மேல் கட்டப்பட்டிருக்கும் பட்டாடை தோலாகவும், குடத்தில் சுற்றப்பட்டிருக்கும் முப்புரி நூல் நாடி நரம்புகளாகவும் குடம் வலிமை மிகுந்த எலும்பாகவும், வாசனை திரவியங்கள் சேர்க்கப்பட்ட தீர்த்தம் இரத்தமாகவும், உள்ளே போடப்பட்ட நவரத்தினம், பஞ்சலோகம், சுவர்ணம் முதலியன ஜீவனாகவும். தேங்காய் சிரசாகவும், கூர்ச்சம் முடியாகவும் பாவனை செய்யப்படுகின்றது.

பூமாலைகள், சந்தனம், குங்குமம் இவைகளால் கும்பம் அலங்காரம் செய்யப்பட்டு இறைவனின் அருளுருவத் திருமேனியாகப் பாவித்து மந்திரங்களைப் பதித்து வழிபாடு செய்கின்ற பொழுது அந்தக் கும்பம் தெய்வீகத் தன்மையைப் பெறுகின்றது.

**பிரதான கும்பத்தில் போடப்படவேண்டிய திரவியங்கள்**

நவரத்தினம், பஞ்சலோகம், வெண் கடுகு, இலாமிச்சம் வேர், இலவங்கப்பட்டை, சாதிக்காய், கராம்பு, கோட்டம், ஏலக்காய், பூலாங் கிழங்கு, வெட்டி வேர், சண்பகமொட்டு, சுவர்ணம், நீலோற்பலம், சுத்தமான பன்னீர், அத்தர், சந்தனம், பிரதிமை முதலியன. கங்கை முதலிய புண்ணிய நதிகளில் எடுத்த புனித தீர்த்தத்தினுல் கும்பத்தைப் பூரித்தல் வேண்டும்.

இதற்கு ஆசனமாக ஏழுதானியங்களை அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு முறைப்படி ஸ்தாபித்து வழிபாடு செய்யப்பெற்ற கும்ப தீர்த்தத்தினை சுவாமியினுடைய திருமுடியின் நாற்புறங்களிலும் படும்படி மழைத்தாரை போன்றும் பூவாழியில்நின்று நீர் சொரிகின்ற தன்மை போன்றும் பெருமானது திருமுடியில் அபிஷேகம் செய்தல் வேண்டும். முதலிலே பிரதான கும்பத்தையும், அடுத்து சக்தி கும்பத்தையும், அடுத்து அட்ட வித்தியேசுரர் கும்பங்களையும் முறையாக அபிஷேகம் செய்தல் வேண்டும். எல்லா மூர்த்திகளுக்கும் சக்தி கும்பம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

கும்பாபிஷேகக் கிரியைகளை மூன்று பாகமாகப் பிரிக்கலாம். முதலாவது: ஆலயத்தைச் சூழ உள்ள அரக்கர், பிசாசு, இராட்சதர் முதலிய துட்டர்களை விலக்கி அந்தக் கிராமத்தில் அமைதி, சாந்தி, பரிசுத்தம், அன்பு முதலியவற்றை உண்டாக்குவது.

இரண்டாவது கிரியை:- இறைவனின் அருளுருவத் திருமேனியை பஞ்ச பூதங்கள், சூரிய சந்திரர்கள், ஆன்மா ஆகிய எட்டு மூர்த்தமாகிய அழகிய உருவத் திருமேனியாக அமைத்துக்கொள்ளச் செய்யப்படும் கிரியை.

மூன்ருவது கிரியை:- வச்சிரம் முதலிய ஆயுதங்கள் ஐந்தாம் ஆவரணமாகவும், இந்திராதி பத்துத் திக்குப் பாலகர்களை நான்காம் ஆவரணமாகவும், நந்தி முதலான சிவாம்சம் பெற்ற தேவர்களை மூன்ரும் ஆவரணமாகவும், அநந்தனன் முதலான சிவாம்சம் பெற்றவர்களை இரண்டாம் ஆவரணமாகவும், ஈசாநம் முதலானவர்களை முதலாம் ஆவரணத்திலும், பூசித்து மந்திர ஸ்வரூபமான இறைவனையும் இறைவியையும் முற் கூறிய உருவத்திருமேனியில் எழுந்தருளச் செய்தலாகும். இங்ஙனம் கும்பாபிஷேகக் கிரியைகள் மூன்று வகைப்படும்.

ஆகம முறைப்படி திரவியலோபம், கிரியாலோபம், மந்திராலோபம் இல்லாமல் செய்யப்படும் மகாகும்பாபிஷேகத்திஞல் பிரதிஷ்டை செய்யப்பெறும் திருவுருவத்திலே சூரியர் சந்திரர் உள்ளவரையிலும் தெய்வசாந்நித்தியம் குன்ருது நிலைத்து நிற்கும், இது முக்காலும் சத்தியம்.

சுபமங்களம்

உ
சிவமயம்

# கும்பாபிஷேக தத்துவங்கள்

சிவனை முழுமுதல் கடவுளாகக்கொண்டும் வேத சிவாகமங்களைப் பதி வாக்காகக்கொண்டும் ஒழுகும் சமயம் சைவசமயம். நாம் பிறந்த நாள் தொட்டு இறக்கும்வரை படுக்கை விட்டு எழுந்த நேரந் தொட்டு நித்திரைக்குச் செல்லும்வரை எம் வாழ்வோடு பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்துள்ள சமயம் சைவ சமயம் ஒன்றே.

சைவ சமய வழிபாட்டுத் தலங்கள், திருக்கோயில்கள் கட்டப்படவேண்டிய முறைகளை நூல்கள் விரிவுபடுத்திக் கூறும். திருக்கோயில்களின் அமைப்பில் தனிச் சிறப்புண்டு. எமது தேகத்தைப் போன்றே திருக் கோயில்கள் கட்டப்படுகின்றன. மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்தம்ப மண்டம், வாசல் கோபுரம், வசந்த மண்டபம், யாகசாலை, பாகசாலை முதலிய பல மண்டபங்களோடு திருக்கோயில்கள் அமைக்கப் படுகின்றன. சகல வேலைகளும் நிறைவு பெற்ற பின்பு ஒரு சுப முகூர்த்ததினத்திலே திருவருளை முன்வைத்து கும்பாபிஷேகத்தைச் செய்தல் வேண்டும் என்பது விதி. ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட ஆலயத்திலே கருவறையில் (மூலஸ்தானத்தில்) எங்கும் வியாபகமாக உள்ள இறைவனை அடியவர்கள் வேண்டுதல் செய்து வழிபடுவதற்காக எழுந்தருளி வந்து சாநித்தியமாக இருக்கும்படி வேண்டிக் கொள்வதே மகாகும்பாபிஷேகம் என்பதாகும்.

ஆகம முறைப்படி செய்யப்படும் கும்பாபிஷேகத்திலே திருவுருவத்தில் தெய்வ சாநித்தியம் உண்டாகிறது.

**ஆலயம்:**

திருக் கோயில்களை ஆலயம் என்று கூறப்படும். ஆன்மாக்கள் லயப்படும் இடமே ஆலயம். சர்வவியாபியாகிய இறைவன் ஆன்ம கோடிகளுக்கு அருள் செய்யும் பொருட்டு எழுந்தருளியிருக்கும் இடம் குரு, லிங்க, சங்கமம் என்னும் மூன்றுமாம். அவற்றுள்ளும் ஆலயங்களிலே பய பக்தி ஆசார ஒழுக்கம் மிக்க குருமாரினால் விதிப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டு எழுந்தருளியிருக்கிறான் இறைவன்.

இறைவன் திருவருளைப் பெற்றுக் கொள்வதற்கு ஆலயம் மிக முக்கியமானதாகும்.

## ஆலயம் அவசியம் ஏனோ:

உதாரணமாக:— ஓர் பசு இருக்கிறது. அதனுடைய பால் தேவைப்படுகின்றது. அதனது காதைப் பிடித்துப் பிசைந்தால் பால் வராது. பாலைப் பெற்றுக் கொள்வதற்கு அப்பசு பக்குவம் வந்து கன்று ஈன்று அதன் இரத்தம் பாலாகச் சுரந்த பின்பு, மடியைப் பிடித்து இழுக்கின்றபொழுது தான் பாலைப் பெற்றுக் கொள்ள முடியும். இது போன்று ஆகம முறைப்படி அமைக்கப்பட்டு விதிப்படி கிரியா கர்மங்கள் நிறைவு பெற்ற பிறகு தான் இறைவனது திருவருளைப் பெற்றுக் கொள்ளலாம். பசுவினது பாலைப் பெறுவதற்கு அதன் முலைக்காம்பு எவ்வளவு முக்கியமோ அதே போன்று

இறைவனது திருவருளாகிய பாலைப் பெறுவதற்கும் ஆலயமாகிய பசுவினது மூலையாக விளங்குகின்ற திருப் பெருவடிவம் முக்கியமானதாகும்.

## ஆலய அமைப்பு:-

சைவ ஆலயங்கள் மனித உருவத்தில் அமைந்திருப்பது விசேட தத்துவம் வாய்ந்தது. ஒருவன் மேற்கே தலைவைத்து நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கும் பாவனையிலே தான் சைவ ஆலயங்கள் கட்டப் படுகின்றன. அப்படிப் பாவனை செய்து பார்க்கின்ற பொழுது, தலைகர்ப்பக்கிருகமாகவும், கழுத்துஅர்த்த மண்டபமாகவும், விரிந்து விளங்கும் புயம் தொடக்கம் மார்பு பரியந்தம் உடைய பாகம் மகாமண்டப மாகவும், மார்பு தொடக்கம் இடுப்பு வரையிலுமுள்ள பாகம் தரிசனை மண்டபமாகவும், இடுப்புத் தொடக்கம் பாதபரியந்தம் உடைய பாகம் ஸ்தம்ப மண்டப மாகவும், உயர்ந்து விளங்கும் பாதங்கள் வாசல் கோபுரமாகவும் அமைய வேண்டுமென்று ஆகமங்கள் கூறுகின்றன. இந்த ஒழுங்கு முறையில் அமைக்கப்பட்ட ஆலயங்களிலே இறைவன் திருவுருவங்களைக் கும்பாபிஷேகம் செய்து வைத்தல் வேண்டுமென்று கூறப்படுகின்றது.

## கும்பாபிஷேகம்:-

கும்பாபிஷேகம்:-- குடமுழுக்கு -- பிரதிட்டை என்பன ஒரு பொருட் சொற்களாகும். அருவுருவாகிய சிவலிங்கத்தையோ, உருவத்திருமேனியாகிய மூர்த்தியையோ கருவறையில் (மூலஸ்தானத்தில்) பிரதிஷ்டை செய்தல் வேண்டும்

**பிரதிட்டை:-**

பிர + திட்டை எனப் பிரித்து விசேடமான நிலைநிறுத்தல் எனப் பொருள்படும்
அதாவது:- மந்திரம், தந்திரம், கிரியை, பாவனை என்பவற்றில் வல்லவராய், விதிப்படி ஆசாரியத்துவம் பெற்றவராய் உள்ள சிவாசாரியார் சிவலிங்கத்தையோ; உலோகங்களினாலும் சிலையினாலும் செய்யப்பட்ட திருவுருவத்தையோ சுபமுகூர்த்த தினத்தில் விதிப்படி ஸ்தாபித்தலாகும்.

**கிரியைகள்:-**

கும்பாபிஷேகத்தின் போது இடம் பெறும் கிரியைகளை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை: பூர்வாங்கக் கிரியைகள். விஷேடக்கிரியைகள் என்பன.

பூர்வாங்கக் கிரியைகளாவன:- அனுஞ்ஞை, கிராமசாந்தி, பிரவேசபலி, நவக்கிரக சாந்தி, வாஸ்து சாந்தி, மிருத் சங்கிரகணம், அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், கடஸ்தாபனம், யாகசாலாபிரவேசம், யாகபூசை முதலியன. கும்பாபிஷேகத்துக், குரிய விஷேடக்கிரியைகள்:-- தூபி ஸ்தாபனம் மங்கள தீபதேவிஸ்தாபனம். யந்திரஸ்தாபனம் முர்த்தி ஸ்தாபனம், அட்டபந்தனம், பிரம்ப சுத்தி, நியாசவகை, பூர்வ பச்சிம சந்தானம், பரிசாகுதி, மகாபூரணாகுதி, வீதிப் பிரதட்சணம், மகாகும்பாபிஷேகம் என்பனவாகும்

யாக பூசை :-

சம்புரோட்சணப் பிரதிஷ்டையின் போது முன்னரேயுள்ள மூர்த்தியிலிருந்து ஆகர்சிக்கப்பட்ட கலைகளோடு கூடிய மந்திரம் பதிக்கப்பட்ட மூர்த்தியின் சாநித்தியம் நிறைக்கப்பட்ட கடத்தை, யாகசாலையின் மத்தியில் அமைந்திருக்கும் பிரதான வேதிகையில் சப்த தானியங்களை நிரப்பி அதன் மேல் வைத்து யாகபூசை செய்தல் வேண்டும். சர்வ வியாபியாக விளங்கும் இறைவனை திருவுருவத்திலே சாநித்தியப்படுத்தித் திருவருள் சுரக்க வைப்பதற்காகச் செய்யப்படும் கிரியையே கும்பாபிஷேகக் கிரியையாகும். பஞ்ச பூதமயமான இறைவனைப் பஞ்ச பூதங்களின் முலமாகவே சாநித்தியமடையச் செய்வதே கும்பாபிஷேகம் காட்டும் தத்துவப் பொருளாகும்.

பிரமத்திலிருந்து ஆகாசம் தோன்றியது. ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்கினியும், அக்கினியிலிருந்து ஜலமும், ஜலத்திலிருந்து பிருதுவியும் தோன்றியதாக தைத்திரீய உபநிடதம் கூறும். ஆகாச வெளியில் அமைவது யாகசாலை. அங்கு கூறப்படும் மந்திரங்கள் வாயு தத்துவத்தைக் குறிப்பன. இவ் வாயு அங்கு ஓமகுண்டங்களில் வளர்க்கப்படும் தேயுவுடன் (அக்கினியுடன்) சேர்ந்து இயங்குகின்றது. சிதாகாசமானதும் சிவருபமானதுமான யாகசாலையில் சிவமந்திரோச்சாடனமான நாத ஒலி சேர்ந்து ஓம குண்டங்களில் சுவாலித்து எரியும் அக்கினியானது வேதிகையில் வைக்கப்பட்டிருக்கும் நீர் நிறைக்கப்பட்ட கும்பங்

களோடு நாடீ சந்தனம் செய்யப்படுகின்றது. இங்ஙனம் யாகபூசையின் போது நான்கு பூதங்களும் சேருகின்றன. பின்னர் நாடீ சந்தானம் மூலமாக கருவறையில் எழுந்தருளியிருக்கும் சிலாருபமான-- பிருதுவி மயமான மூர்த்தியுடன் இணைக்கப்படுகின்றது. ஆதலின் ஆகாசம் வாயுவுடனும், வாயு அக்கினியுடனும், அக்கினி நீருடனும், நீர் மண்ணுடனும் படிப்படியாகச் சேர்க்கப்படுகின்றன. இங்ஙனம் விண்ணில் காட்சிக்கு அரியனாய் இருக்கின்ற இறைவன் மண்ணில் காட்சிக்கு எளியனாய், அடியார்க்கு அடியனாய் மாற்றப்படும் நிலையே பிரதிஷ்டை அல்லது கும்பாபிஷேகம் தரும் தத்துவமாகும்.

**சிவோகம் பாவனை:-**

யாக பூசையில் இதுவே சிறப்பு அம்சமாகும். சிவசாரியார் தன்னைச் சிவமாகப் பாவிக்கும் நிலை. இது பூசைகள் யாவற்றிலும் இடம் பெறுவதென்றாலும் கும்பாபிஷேகக் கிரியையில் மிக மிக முக்கியமானதாகும். சிவாசாரியார் விநாயகர் குரு இவர்களுக்கு வணக்கம் செலுத்தி ஆசமனம் பிராணயாமம் செய்து தமது கைகளில் மந்திரங்களைப் பதித்து தேகத்தில் தான் பூசிக்கப் போகும் இறைவனது மந்திரங்களை அந்தந்த இடங்களில் நியசித்து தனது கையை இறைவனது கையாகப் பாவித்துத் தனது சிரசில் வைத்து தேகத்தைச் சிவனாகப் பாவிக்கின்ற நிலை சிவோகம் பாவனை என்று கூறப்படும். இவ்வாறாகத் தம்மைச் சிவமாகப் பாவித்துச் சிவோகம் பாவனையில் நின்ற சிவாசாரியார், கும்ப பூசையைத் தொடங்க வேண்டும். நாம் யாக

சாலையை நோக்கும் போது, வேள்வியும் சிவ்சொரூபம், வேள்விச்சாலையும் சிவ சொரூபம், கும்பங்களும் சிவசொரூபம், சிவாசாரியாரும் சிவசொரூபம் என்னும் பேருண்மை தெற்றெனப் புலப்படும்.

**பரிசாகுதி:-**

பரிசம் என்ருல் தொடுதல் என்பது பொருள். ஆகுதி என்ருல் ஓமம் செய்தல் என்பது பொருள், அக்கினி, கும்பம், பிம்பம் ஆகிய மூன்று இடங்களிலும் பூசிக்கப்படும் மூர்த்தியை நாடீ சந்தான மூலம் தொடர்பு படுத்தி அதன் மூலம் ஆகுதிகளை அக்கினியில் "ஸ்வா" என்று கூறி நெய்யைச் சொரிந்து, மிகுதியாக இருக்கும் நெய்யைப் பிம்ப சமீபம் கொண்டு சென்று பிம்பத்தின் மீது "ஹா" என்று உச்சரித்துப் பூரணுகுதி செய்தலாகும். இதுவேபரிசாகுதியாகும். தனித்தனி செய்வதாகும்.

**சிருக்கு. சிருவம்:—**

இது அக்கினி காரியம் செய்வதற்கு மிக இன்றியமையாத பொருளாகும். சிருக்கிலே சிவமும் சிருவத்திலே சக்தியும் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. சிருக்கு முழுவதிலும் சிவ பிரானுடைய வியாபாகத்தில் உள்ளதாக நினைத்து ஒவ்வொரு முறையிலும் ஒவ்வொரு பாகத்திலும் தத்துவ் தத்துவேசுரையும், மூர்த்தி மூர்த்தீஸ்வரையும் பூசித்தல் வேண்டும். பின்பு சிருக்கினுலே அள்ளி, சிருவத்தில் நெய்யைப் பூரித்து "ஸ்வா" என்று உச்சரித்து அக்கினியில் சொரிந்து, மீதியை நாடீ சந்தான மார்க்கமாகக் கொண்டு சென்று "ஹா" என்று கூறி சிவ்சக்தி மயமான நெய்யைப் பிம்பத்தில் சொரிதலாகும்.

இதனுல் சிவசக்தி பிம்பத்தில் சாநித்தியப் படு கின்றது என்பது பொருள்.

## கும்பாபிஷேகம்:—

விதிப்படி உரியகாலம் வரையிலும் பூசித்த கும்பத்தை இறைவன் திருவருளை முன்வைத்து, பிரதட்சணமாகக் கொண்டு வந்து யாகதரிசனுர்த்தம் விஷேட பூசை செய்து பின்பு மூலஸ்தானத்திற்குக் கொண்டு போய் பிம்பத்தின் முன்பாக வைத்து கும்பத்திலுள்ள மந்திரம், பதம், புவனம், வர்ணம், கலைகள் இவைகளை முறைப்படி பிம்பத்திலே நியாச மூலம் பதித்தல் வேண்டும். குறிப்பிட்ட சுபமுகூர்த்த நேரத்திலே இறைவனது திருவடிகளைத் தியானித்து வேண்டுதல் செய்து கொண்டு கும்ப தீர்த்தத்தைப் பெருமானது திருமுடியிலே அபிஷேகம் செய்வதாகும்.

அபிஷேகத்தின் பின் இறைவனுக்கு நிவேதனம் செய்யப் பெற்று தேவ பூசைக்காகத் திருக்கதவு சாத்தப்படும். பின்பு ஸ்திராகுதி செய்து தெய்வ சாநித்தியத்தைஸ்திரப்படுத்தி, யாக உத்துவாசனம் செய்தலாகும். உத்துவாசனம் என்பது கும்பாபிஷேகத்துக்காக அழைக்கப் பட்ட தேவர்களைச் சென்று வரும்படி விடை கொடுத்தலாகும். எசமான் அபிஷேகம்:- எசமானுக்குச் சிவ சக்தி கலச தீர்த்தத்தால் மங்கள ஸ்நானம் செய்வித்தலாகும்.

**தச தரிசனம் :-**

கும்பாபிஷேகம் நிறைவாகிய பின்னர் தசதரிசனம் நிகழ்த்தப்பெறும்.

1. **கன்றோடுகூடிய சாந்தமான பசு ( ஒன்று )**
2. **சிவாச்சாரியர்கள் இருவர்**
3. **சாமரம் இரண்டு**
4. **சுமங்கலிப் பெண்கள் (ஆசார சீலமான) இருவர்**
5. **உருத்திர கணிகையர்கள்**
6. **பூரண கும்பம்**
7. **தீபம்**
8. **கண்ணாடி**
9. **தர்மகர்த்தா**
10. **மகா பக்தர்கள், அடியவர்கள்**

இவைகளைத் தனித் தனியாக வைத்துப் பஞ்சாராத்தி செய்து தரிசனம் கொடுத்தல்வேண்டும். கோ தரிசனத்தில் பசுவினது யோனிப்பாகம் சுவாமியின் அருட் பார்வையில் படும்வண்ணம் நிறுத்தி, பஞ்சாராத்தி செய்தல் வேண்டும்.

பசுவினது உடம்பிலே சகல தேவர்களும் சகல தீர்த்தங்களும் நிறைந்து இருக்கின்றன. பசுவினது நான்கு கால்களும் நான்கு வேதங்கள் எனவும், முகம், பிரஷ்டம், மத்தி ஆகிய மூன்று பாகங்களிலும் பிரம விஷ்ணு ருத்திரன் ஆகிய

மூன்று மூர்த்திகளும் எனவும், பிரஷ்ட பாகத்தில் (யோனி) மகாலட்சுமியும் இருப்பதாக ஆகமங் களில் கூறப்படுகின்றன. ஆதலினால் மகாலட்சுமி வாசம் செய்கின்ற பிரஷ்ட பாகத்தைத்தான் தரிசனத்துக்குக் காட்டுதல் வேண்டும்.

திருவுருவத்தின் திருக்கண்கள் திறந்தவுடனும் (நயனோன் மீலனம்) தரிசனம் செய்யப்படவேண்டு மென்றும் சிவாகமசேகரம் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களின் நூலிலும், 'சைவத் திருக்கோயிற் கிரியைநெறி' சிவஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களின் நூலிலும் கூறப்பட்டிருக்கின்றது.

'கும்பாபிஷேக தத்துவங்கள்' பிரம்மஸ்ரீ கு. பாலசந்திரக் குருக்கள் அவர்களின் குறிப்பில் கும்பாபிஷேகம் நிறைவுபெற்ற பின்புதான் '**தசதரி சனங்கள்**' செய்தல் வேண்டுமென்று கூறப்பட்டிருக் கின்றது. தற்போது நடைமுறையிலும் பலகுருமார் களும் கும்பாபிஷேகத்தின் பின்புதான் தரிசனக் கிரியை செய்து வருகின்றார்கள்.

**மண்டலாபிஷேகம் :**

திரைபக்ஷிசம் – மூன்று பட்சங்கள் – இறை வனை -- தொடர்ந்து அபிஷேக ஆராதனைகள்மூலம் விஷேசமாகப் பூஜிப்பதாகும்.

மண்டலாபிஷேகப் பூர்த்தித் தினத்தை விஷேச மாக சகஸ்ர (1008) சங்குகள் வைத்து அபி ஷேகம் செய்தல்வேண்டும். இதனால் தெய்வ சான் னித்தியம் சிறந்து விளங்கும்.

மண்டல முடிவில் - சுவாமிக்கு ரக்ஷாவிசர்ஜனம் செய்து பூர்த்தி செய்யவேண்டும்.

– பூஜா காலங்களில் –

| | | | |
|---|---|---|---|
| அபிஷேகம் | - | சிருஷ்டி - | கிருத்தியம் |
| நைவேத்தியம் | - | ஸ்திதி - | கிருத்தியம் |
| பலி | - | சங்ஹாரம் | கிருத்தியம் |
| தீபம் | - | திரோபவம் | கிருத்தியம் |
| வீபூதி | - | அனுக்கிரகம் | கிருத்தியம் |

( திருவருட் பிரசாதம் )

என்று கூறப்படும்.

பூஜையால் - விஸ்தாரமான ஞானத்தையும், அக்கினி காரியத்தால் சம்பத்தையும், ஜபத்தினுல் பாப சுக்தியையும் - தியானத்தால் மோக்ஷத்தையும் மனிதன் அடைகிருன் என்கின்றது ஆகம சித்தாந்தம்.

சிந்தனை செய்ய மனமமைத்தேன்
செப்பனு வமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்தேன்
கை தொழ வமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத்தேன்
மெய் யரும்ப வைத்தேன்
வந்தருள் கும்பாபிஷேகம்
தெரிசிக்க நல்ல
கண்களைப் பெற்றனனே.

# பஞ்சபுராணம்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

தாளம் - ரூபகம்   **திருஞானசம்பந்தர்**   பண் - நட்டபாடை

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

தாளம். திரிபுடை   **திருநாவுக்கரசர்**   பண். காந்தாரம்.

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி யைம்புலனு மகத்தடக்கி
எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே.

தாளம். ஜம்பை   **சுந்தரமூர்த்திநாயனார்**   பண். தக்கேசி

ஆலந்தா னுகந் தமுது செய் தானை
    யாதி யையம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி துமுடை யானைச்
    சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
    யென்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
    காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

## திருவாசகம்

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடமை யெல்லாமும்
குன்றே யனையாய் எனையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக் குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றுயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம்
பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை படவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம்ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினல் நீடி அறிவரும் பதிகம்
பாடினர் பரவினர் பணிந்தார்.

## திருப்புகழ்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனை நாளும்
கண்டு கொண் டன்புற் றிடுவேனே
தந்தியுன் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவபாலா
செந்திலன் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

### மங்களம்

வான்முகில் வழாது பெய்க
மலி வளஞ்சுரக்க மன்னன்
கோன் முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

# திருநாவுக்கரசு சுவாமிகள்
## திருக்கதவு திறக்கப் பாடிய
# திருமறைக் காட்டுப் பதிகம்

பண் – இந்தளம் 5ந் திருமுறை
திருக்குறுந்தொகை
இராகம்: மாயாமாளவகௌளை தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னூர்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 1

ஈண்டு செஞ்சடை யாகத்துள் ஈசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேயருள் செய்திடும்
நீண்ட மார்க்கத வின்வலி நீக்குமே. 2

அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட விக்கத வந்திறப் பிம்மினே 3

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே 4

மலையி னீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழ லேத்தரோ
விலையின் மாமணி வண்ண உருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமோ 5

பூக்குந் தாழை புறணி யருகெலாம்
ஆக்கும் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி கேளுமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே 6

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தரோ
அந்த மில்லி அணிமறைக் காடரோ
எந்தை நீயடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே. 7

ஆறு சூடும் அணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய எம்பெரு மானிந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே. 8

சுண்ண வெண்பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதி அணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே. 9

விண்ணு ளரர்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னுலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே 10

அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீ ரெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கத வந்திறப் பிம்மினே. 11

திருச்சிற்றம்பலம்,

உ

சிவமயம்

# திருஞானசம்பந்தர் சுவாமிகள் திருக்கதவு அடைக்கப் பாடிய

# திருமறைக் காட்டுப் பதிகம்

**பண்:** இந்தளம் **இராகம்:** மாயா மாளவ கௌளை
**3**-ம், திருமுறை **தாளம்:** கண்டஜாதி திரிபுடை

திருச்சிற்றம்பலம்

சதுரம்மறை தான்துதி செய்து வணங்கும்
மதுரம்பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
இதுநன்கிறை வைத்தருள் செய்க வெனக்குன்
கதவந்திருக் காப்புக்கொள் ளுங்கருத்தாலே 1

சங்கந்தர ளம்மவை தான்கரைக் கெற்றும்
வங்கக்கடல் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
மங்கையுமை பாகமு மாகவி தென்கொல்
கங்கைசடை மேலடை வித்த கருத்தே 2

குரவங்குருக் கத்திகள் புன்னைகண் ஞாழல்
மருவும்பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
சிரமும்மல ருந்திகழ் செஞ்சடை தன்மேல்
அரவம்மதி யோடடை வித்த லழகே 3

படர்செம்பவ ளத்தொடு பன்மலர் முத்தம்
மடலம்பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
உடலம்முமை பங்கம தாகியு மென்கொல்
கடல்நஞ் சமுதாவது வுண்ட கருத்தே 4

வானேர்மறை மாதவத் தோர்வழி பட்ட
தேனேர்பொழில் சூழ்மறைக் காட்டுறை செல்வா
ஏனேர்தொமு பேதத்த இருந்தநீ யென்கொல்
கானேர்கடு வேடுவ னான கருத்தே. 5

பலகாலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி
மலரால்வழி பாடுசெய் மாமறைக் காடா
உலகேழுடை யாய்கடை தோறும்முன் னென்கொல்
தலைசேர்பலி கொண்டதி லுண்டது தானே. 6

வேலாவல யத்தய லேமிளிர் வெய்தும்
சேலன்திரு மாமறைக் காட்டுறை செல்வா
மாலோடய னிந்திர னஞ்சமு னென்கொல்
காலார்சிலைக் காமனைக் காய்ந்த கருத்தே. 7

கலங்கொள் கடலோத முலாவு கரைமேல்
வலங்கொள்பவர் வாழ்த்திசைக் கும்மறைக் காடா
இலங்கையுடை யானடர்ப்பட்டிட ரெய்த
அலங்கல்விர லூன்றி யருள்செய்த வாறே 8

கோனென்று பல்கோடி யுருத்திரர் போற்றும்
தேனம் பொழில் சூழ்மறைக் காட்டுறை செல்வா
ஏனங் கழுகான வருனைமு னென் கொல்
வானந்தல மண்டியுங் கண்டிலாவாறே. 9

வேதம்பல வோமம் வியந்தடி போற்ற
ஓதம்முல வும்மறைக்காட்டி லுறைவாய்
ஏதில்சமண் சாக்கியர்வா க்கிவை யென்கொல்
ஆதரொடு தாமலர் தூற்றிய வாறே. 10

காழிந்நக ரான்கலை ஞானசம் பந்தன்
வாழிம்மறைக் காடனை வாய்ந்தறிவித்த
ஏழின்னிசை மாலையீ ரைந்திவை வல்லார்
வாழியுல கோர்தொழ வானடை வாரே. 11

உ

# எமது வெளியீடுகள்

- ☆ கேதார கௌரி விரதம்
- ○ முத்திரா லட்சணவிதி
- ✱ மகோற்ஸவகாலத் தமிழ்வேதத் - திருமுறைத் திரட்டு
- ○ விவாகக் கிரியை விளக்கம்

கிடைக்குமிடங்கள் :

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

க. சிவபாதசுந்தரக் குருக்கள்
அகில இலங்கைச் சைவக்குருமார் அர்ச்சகர் சபை,
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை.

அச்சுப்பதிப்பு:
சைவப்பிரகாச அச்சகம்,
யாழ்ப்பாணம்.